"கவிதாயினி"

திருமதி.லினோதினி சண்முகநாதன்

(பார்வதி)

# ஆத்மாவின் இராகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கவிதாயினி"

திருமதி.வினோதினி சண்முகநாதன்

(பார்வதி)

# ஆத்மாவின் இராகங்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நூல் தலைப்பு : ஆத்மாவின் இராகங்கள்

ஆசிரியர் : லினோதினி சண்முகநாதன்
lino.shan@hotmail.fr

முகவரி : 17 Rue de Beziers
93150 Le Blanc Mesnil
France

பதிப்பு ஆண்டு : 2011

உரிமை : ஆசிரியருக்கு

அட்டைப்படம், நூல் அழகு : கு. ஜீவகன்
jeevagan_25@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காதல் ஆத்மார்த்தமானது தான்!
நினைவுகள் பேசிக் கொள்கின்றனவே!

காதலுக்குக் கண்களில்லைத் தான்! - அது
குற்றங்களைக் காண்பதில்லையே!

காதல் கூர்மையானது தான்! - அது
இதயங்களைக் காயப் படுத்துகின்றதே!



காதல் மென்மையானது தான்! - அது
கல்லான இதயங்களையும்
கரைத்து விடுகிறதே!

காதல் விந்தையானது தான்! - அது
ஒருவரை அழ வைத்தும்,
மற்றவரைச் சிரிக்க வைத்தும்
வேடிக்கை பார்க்கிறதே!








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உன் கண்ணின்
நீரையெல்லாம்
என் கண்களுக்குள்
வார்த்து விடு!
உனக்கும் சேர்த்து
நானே அழுகிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆகாயமே! - உன்னைத்
தழுவவும் முடியாமல்
தரையிறங்கவும் முடியாமல்
ஒற்றை நிலவாய் நான்
தேய்ந்து கொண்டிருக்கிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எனக்கு மட்டும்
புரியும் கவிதை நீ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மோகனமே! என் இதழ்களில்
ஆரோகணம் இசைத்து விடு!
உன் ஸ்வரங்களிற்
குழைந்து - உனக்குள்
அவரோகணமாய்
இறங்கி விடுகிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அறுந்த தந்திகளில்
முகாரி பாடியே
வயதாகி விட்டது!
நீ எப்போது மோகனம்
இசைக்கப் போகிறாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறவே! - உந்தன்
பெயர் கேட்டேன்!
உரிமை என்று
நீ சொன்னாய்!
சிறகை விரித்தேன்
உனைச் சேர!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவே! - உன்னை
நினைத்துக் கொண்டேயிருப்பதால்
தூங்குவதும், விழிப்பதும்
விழிகளுக்கே தெரியவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முட் படுக்கையாகி விட்ட
என் இரவுகளில், - உன்
நினைவுகள் மட்டுமே
மொட்டுக்களாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வசந்த காலத்தின்
சுவடுகள் வானில்! - என்
வாசலுக்கு வந்த
உன்னைப் போல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மழை நீர் மேகமானாலும்
மீண்டும் மண்ணிலே
பொழிந்து விடுவது போல், - நீ
எங்கே இருந்தாலும்
இறுதியில் என்னுடனே
கலந்து விடுகிறாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் உன்னைத்
தேடும் போது - நீ
ஒளிந்து கொள்கிறாய்!
நீ என்னைத் தேடும் போதோ,
உன் கண்களில் நீராகி
உனக்குள்ளேயே
நிலைத்து விடுவேன்!
அப்போதாவது என்னைப்
புரிந்து கொள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னை உனதாக்கி
என் நினைவுகளை
ஆளுகை செய்ய
உன்னால் மட்டுமே
முடிந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீ என்னுடன்
பேசிக் கொண்டே
இருந்தால், - நான்
ஒவ்வொரு நிமிடமும்
கவிக் குழந்தைகளைப்
பிரசவித்துக் கொண்டே
இருப்பேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீண்டு பரந்த உலகில்
உன் நினைவுகளை
மறக்க ஓடுகிறேன்!
எங்கும், எதிலும்
நீயே தெரிகிறாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் காத்திருப்பின்
கணங்களை உன்னால்
உணர முடியா விட்டாலும்,
கால்களின் வேதனையாவது
புரிந்து கொள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமையில்
உன் நினைவுகளுடன்
பேசிக் கொண்டேயிருப்பதால்,
பார்ப்பவர்களுக்கு நான்
பைத்தியமாகி விடுகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உனக்குள் என்னைத்
தொலைத்து விட்டு
எனக்குள் என்னைத்
தேடுகிறேன்!
பத்திரப் படுத்துகிறேன்
என்று விட்டு, - என்னைப்
பைத்தியமாக்கி விடாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ தொட்டு விட
முடியாத தூரங்களில்
இருக்க ஆசைப் படுகிறேன்!
முடவனுக்குத் தான்
கொம்புத் தேன் மீது ஆசை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓ.............. பூபாளமே!
இரவுகளில் நீலாம்பரியாய்,
என் இமைகளைத்
தடவி விடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவே! தற்காலிகமாகப்
பிரிவதானாலும், - ஒரு
மழை நாளில்
விடை பகிர்ந்து விடு!
என் கண்ணீரத் துளிகள்
உன்னைக் காயம்
செய்யாதிருக்கட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாமரை மலராய் இருக்க
ஆசைப் படுகிறேன்!
ஆதவனைத் தழுவாமலே
அவன் பார்வை பட்டு
மலர்வதால்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உன் நினைவுகளின்
உச்சங்களிலும்
உன்னத நிலையிலும்
சஞ்சரித்து,
உனக்குள் ஒன்றி விடவே
ஆசைப் படுகிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எங்கிருந்தோ வந்தாய்!
எல்லாமே நீயென்றாய்!
ஏக்கங்களை மட்டும் தந்து,
எங்கே நீ மறைந்தாய்?
பொங்கி வரும் கண்ணீரைப்
புன்னகைக்குள் மறைத்தேன்!
தங்கி விடும் சோகத்தைத்
தடுத்தாள வந்து விடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறுகிய என்னுலகில்
நீ மட்டும் பெரிதாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எத்தனை முறை
படித்தாலும்,
புதிதாய்ப், புதிதாய்
விரிகின்றாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காதல் மழையை
நீ பொழிந்தாய்!
கவிதைப் பூக்கள்
நான் தந்தேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பே! - என்
நினைவுகளுக்குக்
கொஞ்சம் ஓய்வு கொடு,
என்னில் எனைக் காண!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப் பற்றிய நினைவு
என்னைச் சுற்றி
எல்லாவற்றையும் எனக்கு
மறக்க வைக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை தடவை
காயம் செய்தாலும்,
ரோஜா முள் மேலேயே
மலர்ந்து விடுகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை விட்டு நீ
வெகு தூரம் பிரிந்தாலும்
உன் நினைவுகள்
என்னோடு பேசிக்
கொண்டேதானிருக்கின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நினைவுகள்
உன்னைச் சுற்றியே
வட்டமிடுவதால்,
நீயும் என்னைப் போல்
தூக்கம் தொலைத்திருப்பாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை நீ நினைப்பதால்
உச்சங்களைத் தொடுகின்றாய்!
உன்னையே நான் நினைப்பதால்,
என்னை நான் தொலைக்கின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலெனும் கோவிலிலே
கற்பூரமாய் எரிந்தேன்
உன் கண் முன்னாலே! - நீ
கண்டு கொள்ளாமலே
இருந்தாய்! - அந்தக்
கல்லான கடவுளைப் போலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன மாயம் செய்தாய்?
என் நீள் தவத்தைக்
கலைத்தாயே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கான உனது தேடல்
உனக்கு சுகமான
வலியாகலாம்! - ஆனால்,
உனக்கான எனது தேடல்
எனக்கோ ஆத்மாவின் வலி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது என்ன? - காதலில்
சாபங்களை எனக்குத்
தந்து விட்டு,
வரங்களை மட்டும்
நீ வாங்கிக் கொள்கிறாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக் காதலை - என்
உயிரினில் வரைந்தது
நீ தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடமைகளைச்
சுமந்த படி நீயும்
உன் நினைவுகளைச்
சுமந்த படி நானும்
கரை சேர்வது எப்போது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காதலே! - உன்
கருவிழிக்குள் என்னைத்
தாலாட்டு! - நான்
கண்ணுறங்கி நாளாச்சு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் காதல்
என்னைக் காயம்
செய்கிறது! - என்
கண்ணீர்த் துளிகள்
ஓயவில்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம் காதல் போல்
என் கவிதைகளும்
சாகாவரம் பெற்றவை!
நீ என்னைக் காதலித்துக்
கொண்டேயிருப்பதால்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உயிரை உன்னில்
எழுதி விட்டு, - வெறும்
உருவமாய்த் திரியும்
நானும் ஒரு
நடைப்பிணம் தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கண்களை உந்தன்
கருவிழிக்குள் அடைத்தாய்!
என் எண்ணங்களை முழுதும்
உனதாய் மாற்றினாய்!
என்னில் நீயாகியவனே!
இனி நானென்பதேது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் பார்வையால் ஓராயிரம்
பட்டாம் பூச்சிகளையல்ல!
தினமும் ஒரேயொரு
பட்டாம் பூச்சியை
என் இதய வானிலே
பறக்க விடு, அது போதும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஆயுளைக்
குறைத்து விடும் மந்திரம்
உனக்கு மட்டுமே
தெரிந்திருக்கிறது!
உன் பார்வையை
மறைத்துக் கொள்கிறாயே!




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்பரிசத்தை விடுத்து - உன்
பார்வையை யாசித்தும்,
ஏனோ தரிசனம் தர
மறுக்கிறாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வேளை உன்
காதலை நான்
உணராமற் போயிருந்தால்,
என் கவிதைகள்
அழுதிருக்கும் -
என் ஊமையான
உள்ளத்தைப் போல!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உன் வாய் மொழிக்குள் நான்
வசப்பட்ட வேளையில் - என்
கவிதை வரிகள் கூட
உன்னிடத்தில்
தோற்றுப் போனது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆத்மார்த்தம் என்ற சொல்லை
உன் அகராதியில்
தேடிப் பார்! - அதன்
பொருளாய் நானிருப்பேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியக் கதிர்கள் தான்
சுட்டெரிக்கின்றனவே!
தெரிந்தும் தாமரையே,
நீயும் என்னைப் போல்
தலைவன் பார்வைக்காகவே
அடம் பிடிக்கிறாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உன் விருப்பங்கள்
எனக்கு வலிகளானால்,
வலிகளைத் தாங்கிக் கொண்டே
நான் மௌனமாய்க்
கரைந்து போகிறேன்! - அந்த
மெழுகுவர்த்தியைப் போல!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அது எப்படி?
என்னோடு எனக்கிருந்த
எல்லாவற்றையுமே உனதாக்க
உன்னால் முடிந்தது?
தூக்கத்தையாவது எனக்குத்
திருப்பிக் கொடுத்து விடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என் வலிகளைத் தாண்டியே
உன் வழிகளைத்
தொட முடியுமானால்,
மகிழ்ந்து உன் காலில்
செருப்பாகிறேன்! - தினமும்
அணியும் போதாவது
என்னை ஒரு தடவை
பார்த்துக் கொள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனக்குள் கொலுவிருக்கும்
வேந்தன் நீ!
எனக்குள் அடங்கி விட்ட
ஞானியும் நீ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கிச் சட்டையிலும்
அவர்கள் காலடி ஓசையிலும்
உனக்காக எனதுயிர்
சிக்கித் தவிப்பதை
உன்னைத் தவிர
வேறு யாரால்
உணர முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் காதல் வலிகளை
உன்னால் அளந்து விடக்
கூடுமா? - முடிந்தால்,
என் கண்ணீரையெல்லாம்
ஒரு துருத்தியிலே
சேகரித்துப் பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீ நடந்த சாலைகளில்
நான் நடந்து செல்லும் போது
என் வழித் தடங்களைத்
திரும்பிப் பார்க்கின்றேன்!
அவை என் தனிமையைக்
கண்டு கரைகின்றன! - நீ
எனக்குள்ளேயே இருப்பதைக்
கண்டு கொள்ளாததால்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அதிசய தூரிகையே!
நீ எனக்குள் வரைந்த
ஓவியத்தை நான்
கவிதைகளாய்
வார்க்கிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அது ஏன்?
காதற் கவிதைகள் மட்டும்
கரைகின்றன?
ஓ...............!
கண்களில் தீட்டப் படுவதாலா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என் ஆத்ம ராகத்தின்
ஆதார சுருதியே!
ரிஷப, காந்தாரங்களாய்
உச்சஸ்தாயி வரை
உனக்குட் பயணித்தும்
முடிவில் ஸட்ஜமமாக
உனக்குள்ளேயே
அடங்கிப் போகிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என் மழைக் கால இரவே!
உன் பெயரை ஓயாமல்
உச்சரித்த படியே,
முடிவினில் நான்
மூச்சிரைத்துப் போவேனோ
அந்த சில்வண்டைப் போல!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆகாயமே!
எனக்குள் விழுந்த
உன் ஒரு துளி
கண்ணீரை - நான்
பக்குவமாய் வாங்கினேன்
அந்த சிற்பியைப் போல!
நீயோ, காதல் முத்துக்களைக்
கொடுக்காமல் எனக்குக்
கண்ணீர் முத்துக்களையல்லவா
பரிசளிக்கின்றாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வைகள் சந்தித்தும்
முகவரி அடைய முடியாமல்
உன் நினைவுகளோடே
மடிகின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேகமே! - நான்
தாகமாய் இருக்கிறேன்!
மின்னலாய் மறையாமல்,
என் வேரிலே
பொழிந்து விடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியே, கரையாதே! - உன்
விம்மலுக்கு ஓய்வு கொடு!
வழிகள் தெரிவதனால்,
வலிகள் சுமையல்லவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயலே! - நீ
மையம் கொண்ட இடத்தில்
அமைதியாக இருக்கின்றாய்!
உன்னால் நான்
அலைக்கழிக்கப் படுவதைத்
தெரிந்த பின்பும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஆத்மா அழும் ஓசை
உனக்குக் கேட்டால், - உன்
உள்ளத்தின் ஆளத்தில் அதை
உறங்க வைத்து விடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவிலாவது உன்னைச்
சந்திக்க முடிந்தால், - நான்
விழி மூடிய படியே
காத்திருப்பேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் கவிதையாக்கும்
புலவன் நீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கீறல்கள் இல்லாமல் - என்
இதயத்தைத் தைத்து விடு!
கிழித்தவன் நீ தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளில் மட்டும்
காதலைப் பொழிந்து விட்டு,
எனக்குள் வசப்படாமல்
ஒளிந்து கொள்ள
உன்னால் எப்படி முடிகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலையுதிர் காலக்
கதிர்களைப் போல - காதலை
மறைத்தும், மறைக்காமலும்
பேசி விடுகிறாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் ஆராதனைக்குரியது தான்!
உருவமில்லாமலே
உனக்குள் நானும்
எனக்குள் நீயும்
வாழ முடிகிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னைச் சிரித்தபடி
செதுக்க நினைக்கும்
சிற்பியே! - நான்
மண்ணல்ல,
பெண்ணாயிருக்கிறேன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுள்ளங் கைகளில் - உன்
பாதங்களை வைத்து விடு!
பஞ்சணையின் சுகத்தில் - நான்
பக்குவமாய்க் கண் துயில்வேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ என்னுட் கலந்திருப்பது
உண்மையானால்,
என் ஆயுளையும் சேர்த்து
நீயே வாழ்ந்து விடு!
உருவமில்லாமல் நான்
உனக்குள்ளேயே
ஒன்றி விடுகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலைவனத்தின் ரணங்கள்
பசும் புல்லில்
இளைப்பாறத் தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயலாய் மோதினாய்!
மோதி விட்டுத்
தென்றலாய் வருடினாய்!
வருடி விட்டு,
சுனாமி போல் என்னை
இடம் பெயர்த்தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனைந்த தலையணையிற்
புரண்ட படியே
உன் கனவில் நானும்,
என் கனவில் நீயும்
ஊமை கண்ட கனவு போல
நம் காதல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைச் சிரிக்க
வைக்கும்
மழலை நீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அழகு படுத்திப் பார்க்கவும்
அலங்கோலமாய்ச் சிதைத்து விடவும்
உன்னால் மட்டுமே முடியும்!

எனக்குச் சொர்கத்தைக் காட்டி விடவும்
நரகத்தில் தள்ளி விடவும்
உன்னால் மட்டுமே முடியும்!

என் கற்பனைகளுக்கும், கனவுகளுக்கும்
லாடன் கட்டி என்னை
நிஜவுலகிற்கு அழைத்துச் செல்ல
உன்னால் மட்டுமே முடியும்!

ஆனால், என்னுயிரில் எழுதிய
உன் பெயரை அழித்து விடவும்
பறித்து விடவும் உன்னாலென்ன? - அந்த
உலகளப்பவனாலும் முடியாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காதலெனும் பெருங் கடலில்
கற்பனையில் முக்குளித்தேன்!
முத்துக்களாய் என் கவிதைகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மாவின் இராகங்கள்! உண்மைக் காதலில் இவ்வுலகை மறந்து இரு உயிர்கள் பாடும் சங்கீதம்!

நாளாந்தம் மனித மனங்களில் எழக் கூடிய சிந்தனைகளைக் கண்டு பிடிக்கும் கருவியை இது வரை உலகில் எந்த விஞ்ஞானியும் கண்டு பிடிக்கவில்லை. ஆனால், ஆண்டவன் காதலுக்கந்த தெய்வீக சக்தியைக் கொடுத்திருக்கின்றான்!

காலங்கள், தூரங்கள், உருவங்கள் கடந்து ஒன்றிற்குள் ஒன்று ஒன்றி விடுவதும், ஒன்றிற்காய் ஒன்று கரைந்து விடுவதுமான ஆத்மார்த்தமான காதலை, இந் நூல் முழுவதும் பதிவு செய்திருக்கின்றேன்.

பார்வதி என்னும் புனைப் பெயரில், tamilvishai.com இணையத் தளத்தில் தொடர்ந்து வெளிவந்த எனது ஆத்மாவின் இராகங்களைத் தொகுத்து ஒரு நூலாக உங்கள் முன் படைப்பதிற் பெருமகிழ்வடைகின்றேன்!

என்றும் அன்புடன்,
லினோதினி சண்முகநாதன் (பார்வதி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org